02. இன்று மெசியா (தியானப் பாடல்)
இயல்: முனைவர் கவி. சேவியர்
இசை: நிஷா
பாடியவர்: சாம் பி.கீர்த்தன்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

இன்று மெசியா நம் மீட்பர்
தாவீதின் ஊரில் பிறந்துள்ளார்
இருளை விலக்கும் சுடரொளியாய்
இறைமகன் இயேசு பிறந்துள்ளார்
தாழ்மையின் குடிலில் பிறந்தவரே
ஏழையென் இதயம் உறைவீரே

சரணம்

1. விண்ணகம் இன்று மகிழ்ந்திடுமே
   மண்ணகம் உவந்து சிரித்திடுமே
   கடல்வாழ் உயிர்கள் களித்திடுமே
   காடுகள் வயல்கள் களித்திடுமே
   நீதியில் ஆளும் மன்னர் அவர்
   தீர்ப்பினை நல்கும் தூயர் அவர்
   உண்மையில் வாழும் வேந்தன் அவர்
   தொழுவினில் மலர்ந்துள்ள மழலை அவர்
   உறவே உம்மில் உளமகிழ்வோம்
   இறவா நிலையை யாம் அடைவோம்.

2. புதியதாய் பாடல் இசைத்திடுவோம்
   பரமனின் திருப்பெயரைப் புகழ்ந்திடுவோம்
   அவரது மீட்பை உரைத்திடுவோம்
   வியத்தகு செயல்களைப் பரப்பிடுவோம்
   மாட்சியில் ஆளும் மன்னர் அவர்
   தெய்வம் அனைத்தின் மேலானவர்
   தாழ்மையில் பூத்த தேவன் அவர்
   பாரினில் பிறந்துள்ள பாலன் அவர்
   இறைவா உம்மைப் பணிந்திடுவோம்
   உமையே நாளும் அணிந்திடுவோம்.

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **[www.manavai.com](http://www.manavai.com)**
**(Christmas 2021)**